**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C. C. No.124-2019**

| L.W.11 P.W.6 | | |
|---|---|---|
| Name: | தியாகராஜன் | Caste: |
| Father's Name: | நடராஜன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:60/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.11.2025

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் 1,2,4,7,8 ஆஜர். எதிரிகள் 3,5,6 ஆஜர் இல்லை. எதிரிகள் 3,5,6 சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முன் விசாரணை:**

நான் தற்போது தென்னம்புலத்தில் குடியிருந்து TNSTC-ல் வேலை செய்து தற்போது பணி ஓய்வு பெற்றுள்ளேன். ஆஜர் எதிரிகளில் செல்வராஜ் என்பவரை தெரியும். 7-வது எதிரியைத் தெரியும், அவரது பெயர் தெரியாது. (7-வது எதிரியின் பெயர் அமுதா என்பது நீதிமன்றத்தால் பதிவு செய்யப்படுகிறது.) மற்றவர்களின் பெயர் தெரியாது. செல்வராஜ் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் எனக்குத் தெரியும். அவர்கள் மீது என்ன வழக்கு என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியளிக்காததால் அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154/ பிரிவு 157 BSA-ன் படி விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பில் விசாரணை**

நான் தென்னம்புலம் நடுக்காட்டில் எத்தனை வருடமாக குடியிருந்து வருகிறேன் என்றால், நான் பிறந்து வளர்ந்து அங்குதான் குடியிருந்து வருகிறேன். எதிரி செல்வராஜ் என்பவரும் அதே ஊரில் பிறந்து வளர்ந்து குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். செல்வராஜ் என்ன வேலை செய்கிறார் என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. செல்வராஜிற்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால், அது எனக்குத்

தெரியாது. அவர் 2–வதாக திருமணம் செய்து கொண்டார், அதைப்பற்றி எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது. அவர் தற்போது எங்கு குடியிருக்கிறார் என்று எனக்குத் தெரியாது. சாட்சி மீண்டும் மாற்றி செல்வராஜ் வீட்டில்தான் குடியிருந்து வயல் வேலை பார்த்து வருகிறார் என்று சொல்கிறார். 7–வது எதிரி அமுதாவை எப்படி தெரியும் என்றால், அவரை எங்கள் ஊரில் பார்த்துள்ளேன்.

கடந்த 11.02.2019 அன்று மறைஞாயநல்லூர் முத்து மாரியம்மன் கோவிலில் செல்வராஜிற்கும், சாந்திக்கும் 2–வது திருமணம் நடந்ததாக புகார்தாரரான சித்ரா தகவல் கிடைத்ததாகவும், குடும்பதாருடன் திருமணம் நடக்கும் இடத்திற்கு சென்று திருமணத்தை பார்த்ததாகவும், அதைக் குறித்து எனக்கு தகவல் தெரிய வந்தது என்றும், தற்போது எதிரி எனது ஊரைச் சேர்ந்தவர், எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

இல்லை.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..S. Dineshkumar, 13.11.2025)**
**Vedaranyam(F.A.C.)**